**ஹொரொவபொதான பிரதேச சபை**
**அனுராதபுரம் மாவட்டம்**

-----------------------------------

1. **நிதிக் கூற்றுக்கள்**

1.1 **நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2020 மார்ச் 13 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 ஆகஸ்ட் 21 ஆம் திகதியும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்டம்பர் 14 ஆம் திகதியும், தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

1.2 **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

பிரதேச சபையின் நிதிக்கூற்றுகள் குறித்து நான் கருத்து தெரிவிக்கவில்லை. கருத்து விளக்கத்திற்கான அடிப்படைகளில் கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக்கூற்றுகள் தொடர்பாக கணக்காய்வு கருத்துக்கான அடிப்படையை வழங்க போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு அத்தாட்சிகளைப் பெற்றுக் கொள்ள என்னால் முடியவில்லை.

1.3 **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

(அ) **கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் 16 பண்முகப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களிற்கு ரூபா 8,624,400 பெறுமதியான தொகை செலவு, மூலதனச் சொத்துகள் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புக்கான மீண்டெழும் செலவாக கணக்கிடப்பட்டிருந்தது. | சபையின் மூலதனச் செலவுகள், மூலதனச் செலவுகளின் கீழ் கணக்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு ரூபா 62,512,322 தொகை பெறுமதியான காணிகள் மற்றும் கட்டிடங்கள் 08 இன் பெறுமதி கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | சபைக்குரிய அனைத்து சொத்துக்களையும் கணக்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (iii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு சபையிடம் இருந்த ரூபா 57,446,247 தொகை பெறுமதியான மோட்டார் வாகனங்கள் 08 இன் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சபைக்குரிய அனைத்து சொத்துக்களையும் கணக்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (iv) | பெறுமதி வெளிப்படுத்தப்படாத மோட்டார் வாகனங்கள் 07 இன் பெறுமதியை மதிப்பிட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | சபைக்குரிய அனைத்து சொத்துக்களையும் மதிப்பிட்டு கணக்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (v) | சபைக்குரிய நீலப் பசுமை பூங்கா அமைந்திருக்கும் இடத்தின் பெறுமதி மற்றும் அந்த இடத்த்இல் நிர்மாணிக்கப்பட்டு சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த கட்டிடங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | சபைக்குரிய அனைத்து சொத்துக்களின் பெறுமதியையும் கணக்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (vi) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 35,500 தொகை பெறுமதியான விரல் அடையாள இயந்திரத்தின் பெறுமதி நிதிக்கூற்றுகளில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | சபைக்குரிய அனைத்து சொத்துக்களின் பெறுமதியையும் கணக்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

**(ஆ) நிகழத்தக்க பொறுப்புகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு சபைக்கு எதிராக வெளி தரப்பினர் 02 இற்கு மற்றும் சபையினால் வெளித் தரப்பினர் மீது தொடுக்கப்பட்டிருந்த வழக்குகள் தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுகளின் மூலம் வெளிப்படுத்தப்பட வில்லை. | சீரற்ற பொறுப்புகள் தொடர்பான விபரங்கள் நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

**(இ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 06 கணக்குகளின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மற்றும் ஆவணங்களின் பெறுமதிகளுக்கிடையே ரூபா 136,497 தொகை மொத்த வேறுபாடு காணப்பட்டது. | உரிய மீதிகளில் வேறுபாடுகளை இணக்கஞ் செய்து கணக்குகளைச் சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிதிக்கூற்றுகளுக்கு இணங்க மீதிகள் சரியாக உள்ளதோடு ஆவணங்களைத் தயாரிக்கும் போது ஏற்பட்ட தவறுகளால் இந்த வேறுபாட்டைக் காண்பிப்பதோடு ஆவணங்களைச் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**(ஈ) பெற வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கிடைக்க வேண்டிய 02 கணக்குகளின் மீதிகளான ரூபா 6,719,851 பெறுமதியான தொகை 01 | கிடைக்க வேண்டிய மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

தொடக்கம் 20 ஆண்டுகள் வரையான காலப் பகுதியில் இருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(உ) கணக்காய்வுக்குத் தேவையான எழுத்து மூலமான சான்றுகள் காணப்படாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ரூபா 9,631,482 பெறுமதியான 05 கணக்குகளுக்கு உரிய ஏற்றுக் கொள்ளத்தக்க சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தக் கூடிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (ii) | மீளாய்வாண்டின் ரூபா 45,913,746 பெறுமதியான வருமான விடயங்கள் 25 மற்றும் ரூபா 61,039,452 பெறுமதியான செலவு விடயங்கள் 34 ஆகியவை பிரதான பேரேட்டின் கணக்குக்கு மாற்றப்பட்டதன் நாளாந்த ஜெர்னல் குறிப்புகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | இது சம்பந்தமாக, தேவைப்படும் அனைத்து நாட் குறிப்புகளும் கணக்குகளும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிகள் கையேடு | | | |
| | (i) விதி 33 | வீதவரி கொடுப்பனவு தவிர்ப்புச் செய்யும் நபர்கள் தொடர்பான பட்டியலொன்றும் ஆதனங்களை தடைசெய்யும் பிடியாணையும் ஒவ்வொரு காலாண்டிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| | (ii) விதி 59 | சபை அதிகாரப் பிரதேசத்தில் வியாபாரங்கள் மற்றும் கைத்தொழில்கள் தொடர்பாக கணிப்பீடொன்று நடாத்தப்பட்டிருக்கவில்லை. | விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| | (iii) விதி 217 மற்றும் 218 | சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பி.ச.46 வடிவம் பிரகாரம் பதிவேடொன்று பேணப்படாமல் இருந்ததுடன் சகல காணி மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொரு ஆண்டும் பரீட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (ஆ) | பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை<br>----------------------- | | | |
| | (i) 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்கம் | சபைக்குச் சொந்தமான 07 வாகனங்களுக்கு எரிபொருள் எரிவு தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| | (ii) 2009 ஜுன் 17 ஆம் திகதியிட்ட இலக்கம் 09/2009(I) | கைவிரலடையாள இயந்திரம் நிறுவப்பட்டிருக்கவில்லை. | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் கொள்வனவு வழிகாட்டல் கையேட்டின் 2.9.1 ஆம் பந்தி | கூட்டப்படும் ஒவ்வொரு கூட்டத்திலும் எடுக்கப்படும் பெறுகை தீர்மானங்களின் அளவு பெறுகைக் கொடுப்பனவுக்கான கூட்டமாக கருதப்பட வேண்டும் எனினும் 04 நாட்கள் நடைபெற்ற 17 தீர்மானங்களுக்கு எண்ணிக்கையின் அடிப்படையில் கொடுப்பனவு வழங்கியதால் ரூபா 76,250 பெறுமதியான தொகை மேலதிகமாகக் கொடுக்கப்பட்டிருந்தது. | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

**2. நிதி மீளாய்வு**

-----------------------

**2.1 நிதி விளைவுகள்**

-----------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவீனம் ரூபா 11,375,770 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவீனத்தை விஞ்சிய வருமானம் ரூபா 23,070,993 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,872,800 | 1,371,822 | 1,381,777 | 1,216,884 | 1,326,400 | 1,511,392 | 1,343,325 | 1,226,839 |
| (ii) | வாடகை | 5,102,768 | 4,650,229 | 3,985,243 | 7,696,981 | 5,074,600 | 3,851,465 | 3,546,771 | 7,051,995 |
| (iii) | அனுமதிப்பத் திரக் கட்டணங்கள் | 606,000 | 412,320 | 412,320 | 1,033,300 | 713,000 | 484,050 | 484,050 | 1,033,300 |
| (iv) | ஏனைய வருமானம் | 32,937,250 | 8,950,333 | 12,542,196 | 1,472,605 | 28,053,940 | 51,240,865 | 49,658,263 | 5,064,468 |
| | மொத்தம் | 40,518,818 | 15,384,704 | 18,321,536 | 11,419,770 | 35,167,940 | 57,087,772 | 55,032,409 | 14,376,602 |

### 2.2.2 வீத வரிகள் மற்றும் வரிகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் 09 வீதிகளுக்குச் சொந்தமான 258 சொத்துகளிலிருந்து ரூபா 148,984 வீதவரி வரிகள் அறவிடப்பட வேண்டியிருந்தது. | நிலுவை வீதவரி வரிகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 1994 வீதவரி மதிப்பீடு என்பதனால் இனங்காண முடியாத சொத்துகள் 50% அளவு காணப்படுவதால் வீதவரியை அறவிட இயலாதுள்ளமையால் ரூபா 148,984 பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதோடு புதிய வீதவரி மதிப்பீட்டுக்காக தற்போது உள்ளுராட்சித் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 1994 ஆம் ஆண்டின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு வீதவரிகள் அறவிடப்பட்டு வந்தன. | 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை வீதவரி மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | புதிய வீதவரி மதிப்பீட்டுக்காக தற்போது உள்ளுராட்சித் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. |

2.2.3 **வாடகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 1980/46 மற்றும் 1980 திசெம்பர் 31 ஆம் திகதிய உள்ளூராட்சி சுற்றறிக்கைக்கு இணங்க 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை கடைகள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும் எனினும் 1994 ஆம் ஆண்டின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு சபைக்குச் சொந்தமான 22 கடைகளின் வாடகைகள் அறவிடப்பட்டுக் கொண்டிருந்தன. | சுற்றறிக்கையின் படி கடைகளை 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை புதிதாக மதிப்பீட்டுக்கு உட்படுத்தி அவற்றுக்குரிய புதிய மதிப்பீட்டின் பிரகாரம் வாடகைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சொத்து மதிப்பீடு மூலமாக கடைகளுக்கான வாடகைகளை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | பொது வியாபார நிலையத்தின் 4, 8, 9 ஆம் இலக்க கடைகள் மற்றும் 10 தவிர ஏனைய அனைத்து கடைகளுக்காகவும் 1994 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதோடு ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | புதிய மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | புதிய மதிப்பீடு மூலமாக கடைகளுக்கான ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

2.2.4 **அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 பெப்ரவரி 01 ஆம் திகதிய 1534/18 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் iii ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்க கூடிய நிறுவனங்கள் அதிகமாக உள்ள போதிலும் 10 நிறுவனங்களுக்கு மாத்திரமே சுற்றாடல் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. | சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டிய தொழில்களை இனங்கண்டு வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

2.2.5 **ஏனைய வருமானங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கழிவு கட்டணமாக அறவிடப்பட்ட ரூபா 272,600 பெறுமதியான தொகை மாத்திரம் என்பதோடு திசெம்பர் 31 ஆம் திகதி அறவிடப்பட வேண்டிய நிலுவை ரூபா 1,067,200 பெறுமதியான தொகையாகக் காணப்பட்டது. | அறவிடப்பட வேண்டிய நிலுவை வருமானங்களை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் பிரதான விடயங்கள் 28 ஐ நிறைவேற்றுவதற்காக துணை விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டும் எனினும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரை உரிய விடயங்கள் தொடர்பாக துணை விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக் கவில்லை. | பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் பிரகாரம் துணை விதிகளை பிறப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | துணை விதிகளை பிறப்பிப்பதற்காக பொது வழிமுறையொன்றை உள்ளூராட்சித் திணைக்களத்தால் வழங்குவதற்கு வருங்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் குறிப்பிடப்பட்டது. |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக 2030 ஆண்டிற்கான நிகழ்ச்சி நிரல் தொடர்பாக மீளாய்வாண்டில் சபை அறிந்திருக்கவில்லை. | ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக 2030 ஆண்டிற்கான கொள்கைகளிற்கு ஏற்ப சபை தொழிற்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றேன். எதிர்காலத்தில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு இலக்கை மையமாகக் கொண்ட செயற்பாடொன்று தயாரிக்கப்படும். |

3.2 **முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கட்டிடத் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், இணக்க சான்றிதழ்கள் எவையும் | அங்கீகரிக்கப்பட்ட உரிய திட்டங்கள் தொடர்பாக தேடிப் பார்த்து இணக்கச் | ஏற்றுக் கொள்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருக்கவில்லை. | சான்றிதழ்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான பொது வியாபார நிலையத்தின் 09 கடைகளை, 08 ஆண்டு காலத்திற்கும் அதிகமாக புதுப்பித்து குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்காததால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி சபைக்கு ரூபா 840,000 தொகை பெறுமதி மதிப்பிடப்பட்ட நட்டம் ஏற்பட்டிருந்தது. | உரிய கடைகளை புதுப்பித்து வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (இ) | செயல்நிமித்த கட்டுநிதி முற்பண பணிகள் பூர்த்தியடைந்த உடனேயே செலுத்தப்பட வேண்டும் எனினும் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட முற்பணமான ரூபா 149,400 தொகையானது 06 மாதங்களிலிருந்து 02 ஆண்டுகள் தாமதமாக வழங்கப்பட்டிருந்தது. | செயல்நிமித்த கட்டுநிதி முற்பணத்தை உரிய பணி பூர்த்தியடைந்த உடனே வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

3.3 **சொத்துக்கள் முகாமைத்துவம்**

3.3.1 **சொத்துக்களை ஆவணப்படுத்தாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைக்குரிய மயானங்கள் மற்றும் ஏனைய இடங்களை இனங்கண்டு பெறுமதி மதிப்பிட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | அனைத்து சொத்துக்களினதும் பெறுமதியை மதிப்பிட்டு கணக்கிடப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். பிரதேச சபைக்கு உரிய மயானங்கள் மற்றும் காணிகள் தொடர்பாக அளவிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள துடன் அந்த இடத்தைக் கையேற்பது தொடர்பாக உரிய நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

3.3.2 **கையேற்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு சபையினால் உபயோகப்படுத்தப்படும் வாகனங்கள் 11 இன் உரிமையை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து சொத்துக்களினதும் உரிமையைக் கையேற்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

3.3.3 **விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டில் சபைக்குக் கிடைக்கப் பெற்ற ரூபா 2,175,000 பெறுமதியான போடோன் ரக ட்ரக்டர் வண்டி இதுவரை உபயோகிக்கப்படாமல் சபை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | சபைக்குச் சொந்தமான அனைத்து சொத்துகளையும் அதிகபட்ச செயலாற்றலுடன் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். RD-9395 உடைய ∴போடோன் ட்ரக்டரைப் பழுதுபார்க்க வேண்டியுள்ளதோடு கழிவுகளை எடுக்க பயன்படுத்த நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | சபை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 07 வாகனங்களைப் பழுதுபார்த்து பயன்படுத்தவோ அல்லது கைதவிர்க்கவோ எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான அனைத்து சொத்துகளையும் அதிகபட்ச செயலாற்றலுடன் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். இந்த வாகனங்களின் உரிமையைக் கையேற்க நடவடிக்கை எடுக்கப்படுவதோடு அதன் பிறகு இந்த வாகனங்களை கையேற்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கிறேன். |

## 04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| வட மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2015 மார்ச் 18 திகதியிடப்பட்ட 04/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 06 ஆவது பந்தியின் பிரகாரம் நேரடியாகப் பொறுப்பேற்றுள்ள ஒரு உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டு அறிக்கை பெற்றுக் கொள்ளப் பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டு அறிக்கை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார் |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தல்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2016 ஜனவரி 28 ஆம் திகதிய DMA/2009(1)(i) இலக்க முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப் பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றேன். |